

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (25.3.2025) தலைமைச் செயலகத்தில், பள்ளிக்கல்வித் துறை சார்பில், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகமும் ஆக்சுபோர்டு பல்கலைக்கழகப் பதிப்புத்துறையும் இணைந்து உருவாக்கிய தமிழ்– இந்தோ–ஐரோப்பிய மொழிகளின் வேர்ச்சொல் ஒப்பீட்டு அகராதித் திட்டத்தின் பொது முன்னுரை நூலினையும், முதல் தொகுதி நூலினையும் வெளியிட ஆக்சுபோர்டு பல்கலைக்கழகப் பதிப்புத்துறையின் இந்தியப் பிரிவின் மேலாண்மை இயக்குநர் சுகந்தா தாஸ் பெற்றுக்கொண்டார். இந்நிகழ்ச்சியில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத் தலைவர் திண்டுக்கல் ஐ.லியோனி, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், பள்ளிக் கல்வித்துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் சந்தர மோகன் பி,தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறைச் செயலாளர் வே. ராஜாராமன், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக மேலாண்மை இயக்குநர் முனைவர் பொ.சங்கர் தமிழ் –இந்தோ–ஐரோப்பிய மொழிகளின் வேர்ச்சொல் ஒப்பீட்டு அகராதித் திட்டத்தின் முதன்மைப் பதிப்பாசிரியர் முனைவர் கு. அரசேந்திரன், ஆக்சுபோர்டு பல்கலைக்கழகப் பதிப்புத்துறை அலுவலர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (25.03.2025) தலைமைச் செயலகத்தில், கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறையின் கீழ் செயல்பட்டு வரும் பட்டுவளர்ச்சித் துறையின் சார்பில், பட்டு விவசாயிகள், பட்டு நூற்பாளர்கள் மற்றும் விதைக்கூடு உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கும் வகையில், மாநில அளவில் சிறந்த இரண்டு பட்டு விவசாயிகள், சிறந்த மூன்று விதைக்கூடு உற்பத்தியாளர்கள், சிறந்த மூன்று தானியங்கி பட்டு நூற்பாளர்கள் மற்றும் சிறந்த மூன்று பலமுனை பட்டு நூற்பாளர்களுக்கு முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் பரிசுத்தொகையாக 8 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாய்க்கான காசோலைகளை வழங்கி சிறப்பித்தார். இந்த நிகழ்ச்சியில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா. மோ.அன்பரசன், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறைச் செயலாளர் திருமதி. வே.அமுதவல்லி, பட்டுவளர்ச்சித் துறை இயக்குநர் திருமதி.கி.சாந்தி, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (25.03.2025) தலைமைச் செயலகத்தில், கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறையின் கீழ் செயல்பட்டு வரும் பட்டுவளர்ச்சித் துறையின் சார்பில், பட்டு விவசாயிகள், பட்டு நூற்பாளர்கள் மற்றும் விதைக்கூடு உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கும் வகையில், மாநில அளவில் சிறந்த இரண்டு பட்டு விவசாயிகள், சிறந்த மூன்று விதைக்கூடு உற்பத்தியாளர்கள், சிறந்த மூன்று தானியங்கி பட்டு நூற்பாளர்கள் மற்றும் சிறந்த மூன்று பலமுனை பட்டு நூற்பாளர்களுக்கு முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் பரிசுத்தொகையாக 8 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாய்க்கான காசோலைகளை வழங்கி சிறப்பித்தார். இந்த நிகழ்ச்சியில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா. மோ. அன்பரசன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறைச் செயலாளர் திருமதி. வே. அமுதவல்லி, பட்டுவளர்ச்சித் துறை இயக்குநர் திருமதி.கி.சாந்தி, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (25.3.2025) தலைமைச் செயலகத்தில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் சார்பில், ரூ.57.72 கோடி செலவில் சேலம் மாவட்டம், அரியகவுண்டம்பட்டியில் அடுக்குமாடி வெள்ளி கொலுசு உற்பத்தி வளாகம், கோயம்புத்தூர் மாவட்டம், குறிச்சி சிட்கோ தொழிற்பேட்டையில் தொழிலாளர்கள் தங்கும் விடுதி, காஞ்சிபுரம், கடலூர், திருவாரூர், சேலம், தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களில் 170.21 ஏக்கர் பரப்பில் ரூ.40.27 கோடி செலவில் உருவாக்கப்பட்டுள்ள 5 தொழிற்பேட்டைகள் மற்றும் சேலம், தூத்துக்குடி, கன்னியாகுமரி, கோயம்புத்தூர், ஈரோடு ஆகிய மாவட்டங்களில் ரூ.35.33 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ள 5 பொது வசதி மையங்கள் ஆகியவற்றை திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் அதுல் ஆனந்த், தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் / முதன்மைச் செயலாளர் ஆ. கார்த்திக் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### காங்கேயம் நகராட்சி முத்தூர் பேரூராட்சி பகுதிகளில்

# ரூ.4.50 கோடி மதிப்பீட்டில் பல்வேறு புதிய திட்டப் பணிகள்!

## அமைச்சர் மு.பெ.சாமிநாதன் துவக்கி வைத்தார்!

திருப்பூர், மார்ச் 27-

திருப்பூர் மாவட்டம், காங்கேயம் நகராட்சி மற்றும் முத்தூர் பேரூராட்சிக் குட்பட்ட பகுதியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.4.50 கோடி மதிப்பீட்டில் பல்வேறு புதிய திட்டப்பணிகளை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், திருப்பூர் கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் மு.பெ.சாமிநாதன் துவக்கி வைத்தார்.

திருப்பூர் மாவட்டம், காங்கேயம் நகராட்சி மற்றும் முத்தூர் பேரூராட்சிக் குட்பட்ட பகுதியில் 22.03.2025 சனிக்கிழமை அன்று மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் கோ.மலர்விழி தலைமையில்

காங்கேயம் நகராட்சி, வார்டு எண்.13 அண்ணாநகரில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.24.00 இலட்சம் மதிப்பீட்டில் பல்நோக்கு மைய கட்டடம் கட்டும் பணி, அய்யாசாமி நகரில் தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.1.96 கோடி மதிப்பீட்டில் வார்டு எண்.1, திரு.வி.க. நகர் 10 வது மெயின் வீதி, வார்டு எண்.2, சின்னாய்புதூர் ரோடு, வார்டு எண்.3, மூர்த்திரெட்டிபாளையம் ஏடி காலனி முதல் வீதி, வார்டு எண்.4, திருவள்ளுவர் வீதி முதல் மெயின் வீதி, வார்டு எண்.5, பஜனைமடை வீதி முதல் மெயின் வீதி மற்றும் வார்டு எண்.6, தண்ணீர் தொட்டி வீதி பகுதியில் தார்சாலை சீரமைத்தல் பணி மற்றும் வார்டு எண்.7, சிவசக்தி விநாயகர் கோவில் வீதி முதல் மெயின் வீதி, வார்டு எண்.9, காளியப்பா மருத்துவமனை ரோடு, வார்டு எண்.12, அய்யாசாமி நகர் காலனி 2வது மெயின் வீதி, வார்டு எண்.13, கே.ஜி.கே. நகர் முதல் மெயின் வீதி, வார்டு எண்.17 தாராபுரம் ரோடு முதல் அகிலாண்டபுரம் வரை உள்ள பகுதிகளில் தார்சாலை சீரமைத்தல் பணிகள் மற்றும் முத்தூர் பேரூராட்சி சின்ன முத்தூர் பகுதியில் நீர்வளத் துறை யின் சார்பில் ரூ.2.30 கோடி மதிப்பீட்டில் சின்ன முத்தூர் கிராமம், ஆத்துப் பாளையம் நீர்த்தேக்கத் திட்டத்தின் தலைப்பு ஒழுங்காக்கி மற்றும் காட்டுக் கால்வாய் புனரமைக்கும் பணி என மொத்தம் ரூ.4.50 கோடி மதிப்பீட்டில் புதிய திட்டப்பணிகளை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர், திருப்பூர் கிழக்கு மாவட்டப் பொறுப் பாளர் மு.பெ.சாமிநாதன்

துவக்கி வைத்தார். அதனைத் தொடர்ந்து முத்தூர் பேரூராட்சி, சின்ன முத்தூரில் மலையாத்தாள் ஓடை முத்தூர் தடுப்பனை புனரமைக்கும் பணி மேற்கொள்வது தொடர்பாக அமைச்சர் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இந்நிகழ்ச்சியில், அரவக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் என்.ஆர்.இளங்கோ, மாவட்ட துணை செயலாளர் ராசி கே.ஆர். முத்துக்குமார், நகர செயலாளர்கள் வசந்தம் நா.சேமலையப்பன் காங்கேயம், சபரி எஸ்.முருகானந்தம் வெள்ளக்கோவில், ஒன்றியச் செயலாளர் எஸ்.சந்திரசேகரன் வெள்ளக்கோவில், முத்தூர் பேரூர் செயலாளர் செண்பகம் பாலு, காங்கேயம் நகர்மன்றத் தலைவர் சூரியபிரகாஷ், பொதுக்குழு முன்னாள் உறுப்பினர் எ.எஸ்.கே.கார்த்திகேயன், முன்னாள் உறுப்பினர் எம்.எஸ்.மோகனசெல்வம், காங்கேயம் வட்டக் கழக

செயலாளர்கள் முத்துரத்தினம், மணி, ரவிச்சந்திரன், சௌந்தர்ராஜன், பொன்னுச்சாமி, செல்வராஜ், ராஜா, வெள்ளியங்கிரி, மீசை பாலு, வரதராஜ், முத்தூர் பேரூராட்சி துணை தலைவர் மு.க.அப்பு, முன்னாள் துணைத் தலைவர் பௌத்தியப்பன், காங்கேயம் நகர அவைத்தலைவர் பழனிச்சாமி, துணை செயலாளர்கள் எம்.எஸ்.சுப்பு, மகேஸ்வரி, பொருளாளர் செந்தில்குமார், மாவட்ட பிரதிநிதிகள் பரமேஷ், ஷோபனா சிவலிங்கம், நகர்மன்ற உறுப்பினர்கள் கமலவேணி, வளர்மதி குருசாமி, ஷோபனா, நித்திய கதிர், மீனாட்சி அண்ணாதுரை, ராஜாத்தி பரமேஷ், கவிதா சௌந்தர்ராஜன், வாணி சிவகுமார், சிலம்பரசன், இப்ராஹிம் கலீல்லுல்லா, ஜெயசித்திரா, மாவட்ட அயலக அணி அமைப்பாளர் சிவராஜா, மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி துணை ஒருங்கிணைப்பாளர் செந்தில்குமார், விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் உமாபதி சிறுபான்மையினர் அணி தலைவர் சலீம், நீர்வளத்துறை உதவி செயற்பொறியாளர் சதீஸ்குமார், காங்கேயம் நகராட்சி ஆணையாளர் பால்ராஜ், உதவி பொறியாளர்கள் பரமத்தி, சதீஸ்வரன், குமரேசன், காங்கேயம் நகராட்சி பொறியாளர் குணசீலன் மற்றும் துறை சார்ந்த அரசு அலுவலர்கள் உள்பட மாவட்ட, ஒன்றிய, நகர கழக நிர்வாகிகள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### பெரம்பலூர் மாவட்டம், அரும்பாவூர் பேரூர் கழகம் சார்பில்,

# கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாள் விழா பொதுக்கூட்டம்!

## மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன்- கரூர்.முரளி சிறப்புரையாற்றினார்கள்!

பெரம்பலூர், மார்ச் 27-

பெரம்பலூர் மாவட்டம், அரும்பாவூர் பேரூர் கழகம் சார்பில், கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 72ஆவது பிறந்தநாள் விழா பொதுக்கூட்டம், அரும்பாவூர் பேரூர் கழகச் செயலாளர் எம்.ஆர்.ரவிச்சந்திரன் தலைமையில், ஒன்றிய பிரதிநிதி டி.மதிவாணன் வரவேற்புரையில், அரும்பாவூர் கலைஞர் திடலில் நடைபெற்றது.

வேப்பந்தட்டை மேற்கு ஒன்றிய கழக செயலாளர் எஸ்.நல்லதம்பி, பேரூர் அவைத்தலைவர் ஆர்.மணி, அரும்பாவூர் பேரூராட்சி தலைவர் வள்ளியம்மை ரவிச்சந்திரன், பேரூராட்சி துணைத் தலைவர் எஸ். சரண்யா குமரன், பேரூர் துணைச் செயலாளர்கள் ஆர்.குணசேகரன், அ.பார்வதி, மாவட்ட பிரதிநிதிகள் சீ.ஈஸ்வரன்,

சி.எல்.ராஜேந்திரன், ஒன்றிய பிரதிநிதிகள் ஆர். பூசமுத்து,அ.பாண்டியன், என்.முருகேசன், எஸ்.செந்தில்குமார், பேரூர் கழக பொருளாளர் எம்.அழகேசன், பேரூர் மகளிர் அணி அமைப்பாளர் எல்.இந்திராணி, பேரூர் இளைஞர் அணி அமைப்பாளர் க.ஜெகதீசன், ஒன்றிய தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் எஸ்.சுதாகர் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

கூட்டத்தில்,மாவட்ட கழக பொறுப்பாளர் வீ. ஜெகதீசன் கொள்கை பரப்பு துணைச் செயலாளர் கரூர்.முரளி கலந்து கொண்டு, தி.மு.க.வின் சாதனைகளை விளக்கி சிறப்புரையாற்றினார்கள்.

இதில்,மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர் இரா.ப.பரமேஷ்குமார், வேப்பந்தட்டை மேற்கு ஒன்றிய கழகச் செயலாளர் எஸ்.நல்லதம்பி, வேப்பந்தட்டை கிழக்கு ஒன்றிய கழக பொறுப்பாளர்ந.ஜெகதீஷ்வரன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் அ.அப்துல்கரீம், மாவட்ட தொண்டர் அணி அமைப்பாளர் க.ரமேஷ், மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் எம். ரெங்கராஜ், மாவட்ட அமைப்புசாரா ஓட்டுநர் அணி அமைப்பாளர் எம். மணிவாசகம், மாவட்ட பிரதிநிதி எஸ்.அழகுவேல், வேப்பந்தட்டை கிழக்கு ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் ரா.சிவா உள்ளிட்ட ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். பேரூர் கழக துணைச் செயலாளர் ஆ.ஆறுமுகம் நன்றியுரையாற்றினார்.



கூத்தாநல்லூர் நகர கழகம் சார்பில் நடைபெற்ற இப்தார் எனும் நோன்பு திறக்கும் நிகழ்வில் மாவட்டக் கழக செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ. பங்கேற்று இஸ்லாமிய சகோதரர்களுடன் நோன்பு திறந்தார். உடன் நகர செயலாளர் எஸ்.வி. பக்கிரிசாமி, நகர்மன்ற தலைவர் பாத்திமா பஷீரா, துணை தலைவர் சுதர்சனம் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள், இஸ்லாமிய ஜமாத் நிர்வாகிகள் பங்கேற்றனர்.



திருப்பூர் மாவட்டம், தாராபுரம் வட்டம், கொளத்துப்பாளையம் பேரூராட்சி, காளிபாளையத்தில் கொளத்துபாளையம் பேரூராட்சிக்குட்பட்ட பகுதிகளில் நபார்டு திட்டம், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம், அரசு பள்ளிகள் பராமரிப்பு செய்தல், புதிய நூலக கட்டடம் கட்டுதல், 15வது நிதிக்குழு மானியத்திட்டம், பொது நிதி வேலைகள் திட்டம் ஆகிய திட்டத்தின் கீழ் பல்வேறு புதிய திட்டப்பணிகளை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் மு.பெ. சாமிநாதன், மனித வள மேலாண்மைத்துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணை செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோர் துவக்கி வைத்தனர். இதில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் கோ.மலர்விழி, தாராபுரம் வருவாய் கோட்டாட்சியர் ஃபெலிக்ஸ் ராஜா,தாராபுரம் ஒன்றியச் செயலாளர், ஒன்றியக்குழு முன்னாள் பெருந்தலைவர் எஸ்.வி. செந்தில்குமார் கொளத்துப்பாளையம் பேரூர் செயலாளர் கே.கே.துரைசாமி, பேரூராட்சித் தலைவர் சுதா கருப்புசாமி உள்பட மாவட்ட, ஒன்றிய, கிளை கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் உள்ளனர்.